# ரோக்மா இலவச அஞ்சல்வழி வேதாகமக் கல்வி

*தபால் பெட்டி எண் - 9, No.8, பாரதியார் 2 வது தெரு, S.S. காலனி மதுரை – 10. Ph. 0452 – 4354302*

## மீட்பு

**முன்னுரை :**

'மீட்பு' என்பது வேதாகம சத்தியங்களில் மிகவும் மேலான சத்தியம். இச்சத்தியத்தை அறிந்துகொள்வதைவிட அனுபவிப்பது ஆசீர்வாதமாயிருக்கும். இம்மீட்பின் அடிப்படைபொருள் ''விலைக்கிரயம் கொடுத்து விடுவிப்பது'' ஆகும். நீங்களும் நானும் கர்த்தராகிய கிறிஸ்துவின்மேல் விசுவாசம் வைத்ததினால் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் நம்முடைய அவயவங்களில் உள்ள பாவப்பிரமாணத்திலிருந்தும், சாத்தானின் வல்லமை, அடக்குமுறையிலிருந்தும் இவ்வுலகத்தின் ஒழுக்கக் கேட்டிலிருந்தும், பாவத்திலிருந்தும் மோசேயின் நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலை பெற்றிருக்கிறோம் என்பதை உண்மையாகவே உணரமுடிகிறது. 'மீட்பு' என்ற வார்த்தையின் முழு விபரத்தையும், அதனுடைய துல்லியமான கருத்தையும் கொடுப்பதே இப்பாடத்தின் முக்கிய நோக்கமாகும். எனவே கிறிஸ்துவின் மூலம் நமக்குக் கிடைக்கும் முழுமையான விடுதலையைக் குறித்து நன்கு அறிந்து அதில் மகிழ்ந்து களிகூர ஏதுவாகும்.

### இப்பாடத்தின் முக்கியத்துவம் :

கிறிஸ்துவில் உள்ள நம்முடைய மேலான இரட்சிப்பின் முக்கியமான பாகமாய் இருப்பது மீட்பு. இதை மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். கிறிஸ்து தம்முடைய இரத்தத்தைச் சிந்தி, விலைக்கிரயம் கொடுத்து நம்மை இரட்சித்தார், மீட்டார் என்ற பாடல்களை கிளர்ச்சியூட்டும் வகையில் நாம் பாடுவோமென்றால், நிச்சயமாக இப்பெரிய சத்தியத்தின் உட்கருத்தை பிடித்தவர்களாகவும், நடைமுறை வாழ்க்கையில் அனுபவிக்கிறவர்களாகவும் இருக்க வேண்டும். நம்முடைய இரட்சிப்புக்குத் தொடர்புடைய உபதேசங்கள் அனைத்தும் சாதாரண தத்துவ ரீதியில் மாத்திரம் அறிந்து கொண்டவர்களாயிராமல், நம்முடைய அனுதின ஜீவியத்தில் அனுபவிக்கிறதும், பயிற்சிக்கிறதுமாய் இருக்க வேண்டும். மீட்கப்படுதல் என்பதன் அர்த்தத்தை முழுமையாக அறிந்துகொள்ளும் மட்டும் இரட்சிப்படைதல் என்றால் என்ன என்பதை நம்மால் அறிந்துகொள்ள முடியாது.

**பாடம்**

## I. பழைய ஏற்பாட்டில் மீட்பு :

1. **பழைய ஏற்பாட்டில் தேவன் தம்மை இஸ்ரவேலின் (GOEL) அதாவது உறவினராக–மீட்பராக அல்லது மீட்பின் கிரயத்தைச் செலுத்துபவராக வெளிப்படுத்தியிருக்கிறார் :**
   1. யாத்திராகமம் 6:6,7 (இந்த வசனங்களை கவனமாக வாசிக்கவும்)
      - அ. தேவன் இஸ்ரவேலரை தம்முடைய சொந்த ஜனமாய் இருக்கும்படி தெரிந்துகொண்டார் (ஏற்றுக் கொண்டார்) என்பதை கவனிக்கவும். இவ்வாறாக தேவன் இஸ்ரவேலரின் ''உறவினராக மீட்பராக'' மாறினார்.
      - ஆ. இங்கே இரண்டு காரியங்களைக் கவனிக்கவும் :
        1. தேவன் தம்முடைய மகா வல்லமையினால் இஸ்ரவேல் ஜனங்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டார் (விடுவித்தார்).
        2. அதன் காரணமாக தேவன் இஸ்ரவேலரை தமக்குச் சொந்தஜனமாய் இருக்கும்படி தெரிந்து கொண்டார்.
   2. ஏசாயா 59:20, ''மீட்பர் சீயோனிலிருந்து வருவார்''
      - அ. இங்கே மீட்பர் என்ற வார்த்தை 'கோயேலைக்' குறிக்கிறது. அதனுடைய அர்த்தம் உறவினர்–மீட்பர். அது கிறிஸ்துவுக்கு ஒரு நல்ல மாதிரியாக இருப்பதை நாம் பார்க்கலாம்.
      - ஆ. பழைய ஏற்பாட்டில் உள்ள மீட்பானது இஸ்ரவேல் ஜனங்களோடும் அவர்களுடைய சந்ததியாரோடும் சம்பந்தப்பட்டதாயிருக்கிறது.
        1. லேவியராகமம் 25:25,48 (கவனமாக வாசிக்கவும்)

2. இது சரியாக செயல்பட்டது எப்படி? மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி ஒவ்வொரு ஏழாம் வருடமும் புனித வருடமாகக் கருதப்பட்டு வந்தது. இந்தப் புனித ஆண்டுக்கு முன்பதாக உள்ள ஆறு ஆண்டுகளில் இஸ்ரவேலரின் ஒருவன் கடன்பட்டு, அக்கடனை அந்த ஆறு ஆண்டுகளுக்குள் செலுத்த முடியவில்லை யென்றால் அல்லது தன்னுடைய சொத்தை மற்றவருக்கு விற்றுவிட்டு அதை மறுபடியும் வாங்க முடிய வில்லையென்றால் அல்லது முன்னிலும் மோசமான நிலை ஏற்பட்டால் அல்லது அவனுடைய ஏழ்மையின் காரணமாக தன்னையே அடிமைத்தனத்திற்கு விற்றுவிட்டானென்றால், இந்நிலையில் அவனது நெருங்கிய உறவினர் யூதர்களின் முறைமைப்படி புனித ஆண்டாகக் கருதப்படும் அந்த ஏழாம் வருடத்தில் சொத்தை மீட்பதற்குரிய தொகையைச் செலுத்தி மீட்டுக் கொள்ளலாம் அல்லது அவனுடைய அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பதற்குரிய தொகையைச் செலுத்தி அவனை விடுவிக்கலாம்.

3. இந்த மீட்பைக் குறித்ததான நான்கு காரியங்களை மனதில் கொள்ளவும் :

அ. இந்த மீட்பானது ஒரு இஸ்ரவேலனுடைய பரம்பரைச் சொத்தைக் குறித்து கவலையுள்ள தாயிருக்கிறது (லேவியராகமம் 25:25–27).

ஆ. இந்த மீட்புக்குரிய கிரயம் ஒரு நெருங்கிய உறவினராலே செலுத்தப்படவேண்டும் (லேவியராகமம் 25:47–49).

இ. விலைக்கிரயம் செலுத்துவதற்கு அந்த நெருங்கிய உறவினருக்கு சக்தி இருக்கவேண்டும் (ரூத் 4:4–6; எரேமியா 50:34 வாசிக்கவும்).

ஈ. 'கோயேல்' உறவினர்–மீட்பர் விலைக்கிரயத்தை முழுமையாக செலுத்தும்பொழுது மட்டுமே மீட்பு பூர்த்தியடையும் (லேவியராகமம் 25:27)

**2. ரூத்தின் புஸ்தகத்தில் போவாஸ் – ரூத் : இந்த மீட்பிற்கு ஒரு நல்ல மாதிரியாக இருப்பதை நாம் பார்க்கலாம்**

1. ரூத் நகோமியின் மருமகள். நகோமி தன்னுடைய கணவனையும், இரண்டு குமாரர்களையும் இழந்துவிட்டாள். நகோமி தான் ஏற்கனவே விற்ற சொத்தை திரும்ப வாங்க முடியாத நிலைமையில் இருக்கிறாள். அச்சொத்திற்கு தனது மருமகளாகிய ரூத் வாரிசாக அல்லது உரிமை உடையவளாக இருக்கிறாள். ஆனால் அவளும் ஏழையாக இருந்தபடியால் அச்சொத்தைத் தனக்காக மீட்டுக்கொள்ள முடியவில்லை.
2. போவாஸ், நகோமிக்கு நெருங்கிய உறவினன் (ரூத் 3:9).
3. நியாயப்பிரமாணச் சட்டத்தின்படி போவாஸ் நகோமியின் சொத்தை மீட்டு, அவளின் மருமகளாகிய ரூத்தை தனது மனைவியாக ஏற்றுக்கொண்டு அவளின் மூலமாக சந்ததியை உருவாக்கக்கூடிய சிலாக்கியத்தையும், பொறுப்பையும் பெற்றிருக்கிறான் என்பதை ரூத் அறிந்திருந்தாள் (ரூத் 3:11).
4. போவாஸ் நகோமியின் சொத்தை மீட்பதற்குரிய விலைக்கிரயத்தைச் செலுத்துவதற்குத் தகுதியுடைய வனாகவும், விருப்பமுடையவனாகவும் இருந்தான் (ரூத் 4:3–6).
5. போவாஸ் விலைக்கிரயம் செலுத்தி நகோமியின் சொத்தை மீட்டுக்கொண்டான். எனவே ரூத் அவனுடைய மனைவியானாள் (ரூத் 4:10–13).

**3. இவையெல்லாம் நமது மீட்பராகிய கிறிஸ்துவுக்கும், அவருக்குள் நாம் பெற்றிருக்கிற மீட்புக்கும் மாதிரியாக இருக்கிறது. எப்படி?**

1. போவாஸ் ரூத்தின் நெருங்கிய உறவினனாக இருந்தது போல கிறிஸ்துவும் நம்மை மீட்பதற்காக நம்முடைய நெருங்கிய உறவினராக (மனிதனாக) மாறினார்.

அ. எபிரெயர் 2:14,15, "அடிமைத்தனத்திற்குள்ளான நம்மை மீட்கும்படியாக கிறிஸ்து நம்மில் ஒருவரானார்." அவர் நம்முடைய நெருங்கிய உறவினராக–மீட்பராக மாறினார்.

ஆ. கலாத்தியர் 4:4,5, "நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக கிறிஸ்து ஸ்திரீயினிடத்தில் பிறந்தார்."

2. பழைய ஏற்பாட்டில் உள்ள மீட்பானது இஸ்ரவேல் ஜனங்களோடும், அவர்களுடைய சந்ததியாரோடும் சம்பந்தப்பட்டதாயிருக்கிறது போல நமக்கும் கிறிஸ்துவின் மூலம் கிடைத்த மீட்பானது ஜனங்களுக்கும் அவர்களுடைய சந்ததியாருக்கும் தொடர்புடையதாயிருக்க வேண்டும்.

அ. கலாத்தியர் 4:4 – "நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி" என்று காண்கிறோம். இவ்வேதப்பகுதியானது கிறிஸ்துவினுடைய மீட்பின் பணியின் மூலமாக நாம் அனைவரும் ஒரு ஆசிரியருக்குக் கீழாக இருக்கக்கூடியக் குழந்தைகள்போல் ஒருபோதும் இருப்பதில்லை. ஆனால் குமாரரும், பிதாவினுடைய சுதந்தரருமாயிருக்கிறோம் என்று கற்பிக்கிறது.

ஆ. எபேசியர் 1:11,14. இவ்வேதப்பகுதியில் நாம் பார்ப்பது என்னவென்றால், கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி நாம் தெரிந்துகொள்ளப்பட்டோம். அச்சுதந்தரத்தை அடைவோம் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்.

3. போவாஸ், நகோமியின் சொத்தை மீட்பதற்குரிய விலைக்கிரயத்தை செலுத்துவதற்குத் தகுதியுடையவனாகவும், விருப்பமுடையவனாகவும் இருந்ததுபோல, கிறிஸ்துவும் நம்மைப் பாவத்திலிருந்து மீட்பதற்குரிய விலைக் கிரயத்தைச் செலுத்துவதற்குத் தகுதியுடையவராகவும், விருப்பமுடையவராகவும் இருந்தார்.

அ. ஒருவனும் எனது ஜீவனை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான், நானே அதைக் கொடுக்கிறேன் (யோவான் 10:18).

ஆ. கிறிஸ்து அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்க வந்தார் (மத்தேயு 20:28).

இ. கிறிஸ்து அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுத்தது மாத்திரமல்ல அவர் இன்றும் உயிருள்ளவராயிருக்கிறார் (எபிரெயர் 7:25). எனவே அவருடைய பிள்ளைகளை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவருமாயிருக்கிறார்.

4. போவாஸ் ரூத்தை மீட்பதற்குரிய விலைக்கிரயம் முழுவதையும் செலுத்தி அவளை மீட்டுக்கொண்டான். அதைப் போல நமது மீட்பிற்கான விலைக்கிரயம் முழுவதையும் கிறிஸ்து செலுத்தி நம்மை மீட்டுக் கொண்டார்.

அ. ‘‘கிறிஸ்து நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்’’ (கலாத்தியர் 1:4).

ஆ. ‘‘பாவம் அறியாத அவர் (கிறிஸ்து) நமக்காகப் பாவமானார்’’ (2 கொரிந்தியர் 5:21)

இ. ‘‘கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்கள்’’ (1 பேதுரு 1:18,19).

ஈ. ‘‘சாபத்திலிருந்து நம்மை மீட்கும்படி கிறிஸ்து நமக்காகச் சாபமானார்’’ (கலாத்தியர் 3:13).

**4. பழைய ஏற்பாட்டில் உள்ள மீட்பின் சுருக்கம் :**

1. இஸ்ரவேலின் (GOEL) அதாவது உறவினராக–மீட்பராக பழைய ஏற்பாட்டில் தேவன் காணப்படுகின்றார்.
2. இந்த உண்மை (சத்தியம்) ரூத்தின் புஸ்தகத்தில் மிகவும் தெளிவாக எடுத்துக்காட்டுடன் விளக்கப்பட்டிருக்கிறது.
3. நமது உறவினரும், மீட்ருமாயிருக்கிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்பற்ற படமாக பழைய ஏற்பாட்டில் உள்ள உறவினர்–மீட்பர் அமைந்திருக்கிறது.
4. மீட்பானது கீழ்கண்ட நிலைகளில் காட்சி அளிக்கிறது :

அ. ஒரு நபரின் மூலமாக மீட்பு நிறைவேற்றப்பட்டதாயிருக்கிறது. மோசே இஸ்ரவேலரின் மீட்பராகத் தெரிந்து கொள்ளப்பட்டார் (யாத்திராகமம் 3:10).

கிறிஸ்து தெரிந்துகொள்ளப்பட்ட நமது மீட்பராயிருக்கிறார் (கலாத்தியர் 4:4–5; யோவான் 3:16,17).

ஆ. மீட்பு முழுவதும் தேவனைச் சாரும் (யாத்திராகமம் 3:7,8–ஐ எபேசியர் 1:3–7 உடனும், ரோமர் 5:8 உடனும் ஒப்பிட்டுப் பார்க்க).

இ. மீட்பானது இயேசுகிறிஸ்து சிந்திய இரத்தத்தினால் பாதுகாக்கப்பட்டிருக்கிறது (யாத்திராகமம் 12:13–ஐ எபேசியர் 17 உடனும், 1 பேதுரு 1:18,19 உடனும் ஒப்பிட்டுப் பார்க்க).

ஈ. மீட்பானது தெய்வீக வல்லமையினால் நிறைவேற்றப்பட்டதாயிருக்கிறது (யாத்திராகமம் 13:14; 14:24–31–ஐ ரோமர் 8:2 உடனும், 1 பேதுரு 1:18,19 உடனும் ஒப்பிட்டுப் பார்க்க).

**குறிப்பு :**

இயேசுகிறிஸ்துவின் இரத்தம் ஒரு விசுவாசியை அவனுடைய குற்றத்திலிருந்தும், பாவத்தண்டனையிலிருந்தும் மீட்கிறது (அவனை பாவச் சந்தையிலிருந்து வாங்கி விடுதலை அளிக்கிறது (எபேசியர் 1:7; 1 பேதுரு 1:18,19). பரிசுத்த ஆவியின் வல்லமை இந்த மீட்பை நமது நடைமுறை வாழ்க்கையில் கிறிஸ்துவினுடைய மீட்பின் அடிப்படையில் உண்மையாக மாற்றுகிறது (ரோமர் 8:2; கலாத்தியர் 5:16).

## II. புதிய ஏற்பாடில் மீட்பு :

3 அடிப்படையான கிரேக்கு வார்த்தைகள் புதிய ஏற்பாட்டில் மீட்டைக் குறித்துப் போதிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**1. முதலாம் கிரேக்கு வார்த்தை ‘அகொரஷோ’**

1. இந்த கிரேக்கு வார்த்தை ‘அகொரா’ என்ற கிரேக்கு வார்த்தையிலிருந்து வந்தது. ‘அகொரா’ என்ற வார்த்தையின் பொருள் ‘சந்தை’ என்பதாகும் (மத்தேயு 14:15–ஐ கவனிக்கவும்). (ஜனங்கள் சந்தைக்குப் போய் தங்களுக்குப் போஜனப்பதார்த்தங்களை வாங்கிக் கொள்ளட்டும்).

2. 'அகொரஷோ' என்ற கிரேக்கு வார்த்தையின் உண்மைப்பொருள் 'சந்தையில் வாங்குவது' குறிப்பாக அடிமைகளை விற்கக்கூடிய சந்தையை குறிப்பிடுகிறது.
3. அடிமைச் சந்தையாகிய இவ்வுலகத்தில் நாம் பாவத்திற்கு அடிமைகளாய் விற்கப்பட்டிருந்தோம். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இச்சந்தைக்கு (உலகத்தில்) வந்து அடிமைகளாயிருந்த நம்மை விலைக்கு வாங்கினார் (1 கொரிந்தியர் 6:20; 7:23; வெளி.5:9; அப்போஸ்தலர் 20:28).
4. மனித இனம் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறது என்பதை வேதத்தில் பார்க்கிறோம் (யோவான் 8:34; ரோமர் 6:16; 7:14). இதோடு மனிதன் மரண தண்டனைக்குப் பாத்திரவானாய் இருக்கிறான் என்பதையும் பார்க்கிறோம் (ரோமர் 6:16–23; 5:12; எசேக்கியல் 18:20).
5. மனிதன் பாவத்துக்கு அடிமையாக விற்கப்படுதலுக்கும் அதே சமயம் அதிலிருந்து மீட்கப்படுதலுக்கும் ஏற்ற நிலையில் இருக்கிறான்.
6. பாவத்துக்கு அடிமையாயிருந்த மனித இனத்தை மீட்பதற்குரிய கிரயத்தை தம்முடைய மரணத்தினாலும், தம்முடைய இரத்தத்தினாலும் செலுத்துவதற்கு ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து விருப்பமுடையவராகவும், தகுதி உடையவராகவும் இருந்தார்.

   கிறிஸ்து நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார் (கலாத்தியர் 1:4).

   தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபை (அப்போஸ்தலர் 20:28).

**குறிப்பு :**

'அகொரஷோ' என்ற கிரேக்கு வார்த்தையின் சாதாரண பொருள் "சந்தையில் வாங்குவது" என்பதாகும். 'மீட்டுக் கொள்ளுதல்' என்ற பொருளை இந்த கிரேக்கு வார்த்தை தருவதில்லை. நமது மீட்பிற்காக கிறிஸ்து செலுத்தின விலைக் கிரயத்தை மட்டுமே இது குறிக்கிறது.

**2. புதிய ஏற்பாட்டில் மீட்பின் உபதேசத்தைக் கொடுப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள இரண்டாவது கிரேக்கு வார்த்தை 'எக் அகொரஷோ'**

1. 'எக் அகொரஷோ' என்ற கிரேக்கு வார்த்தையின் உண்மைப் பொருள் "சந்தையில் வாங்கி வெளியே கொண்டு வருதல்" என்பதாகும். 'அகொரஷோ' என்ற கிரேக்கு வார்த்தையின் வடிவமாய் இவ்வார்த்தை இருக்கிறது. 'அகொரஷோ' என்ற கிரேக்கு வார்த்தையின் பொருள் என்னவென்று நாம் பார்த்திருக்கிறோம். அதாவது "சந்தையில் வாங்குவது" குறிப்பாக அடிமைகளை விற்கக்கூடியச் சந்தையை குறிப்பிடுகிறது.
2. 'அகொரஷோ' என்ற கிரேக்கு வார்த்தைக்கு முன் உள்ள 'எக்' என்பதன் பொருள் ஒரு அடிமைக்கு விடுதலை கொடுக்கும் எண்ணத்தில் அவனை அடிமைச் சந்தையிலிருந்து வாங்கி வெளியே கொண்டுவருவது ஆகும்.

   **உதாரணங்கள் :**

   கிறிஸ்து நமக்காகச் சாபமாகி நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார் (கலாத்தியர் 3:13). நாம் புத்திர சுவிகாரத்தையடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத் தக்கதாக, தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார் (கலாத்தியர் 4:4,5).
3. மறுபடியும் விற்பனை செய்வதைத் தடுக்கும் (நீக்கும்) உள்ளான நோக்கத்துடன் (எண்ணத்துடன்) ஒரு அடிமையை சந்தையிலிருந்து வாங்கி வெளியே கொண்டுவருவதே'எக் அகொரஷோ' என்ற கிரேக்கு வார்த்தையின் அர்த்தம் (பொருள்) இது வணிக நடவடிக்கையின் இறுதி முடிவைச் சுட்டிக்காட்டுகிறது.

   பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து கிறிஸ்துவின் இரத்தத்தால் விடுதலைபெற்ற ஒரு விசுவாசி மறுபடியும் பாவத்தால் அல்லது நியாயப்பிரமாணச் சட்டத்தால் அடிமையாக்கப்படுவதில்லை. அவன் மறுபடியும் விற்பனைக்காக வைக்கப்படுவதும் இல்லை.
4. 'அகொரஷோ' என்ற கிரேக்கு வார்த்தையைப்போல 'எக் அகொரஷோ' என்ற கிரேக்கு வார்த்தையும் உண்மையான மீட்பைக் குறிப்பதில்லை. ஆனால் அந்த மீட்பை நிறைவேற்றுவதற்குச் செலுத்தின விலைக் கிரயத்தைத் தெரிவிக்கிறது.

**3. மூன்றாவது, 'லுட்ரூ' என்ற கிரேக்கு வார்த்தை நமது மீட்பை தெளிவுபடுத்திக் கூறும் வகையில் புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது.**

1. இந்த 'லுட்ரோ' என்ற கிரேக்கு வார்த்தையின் பொருள் 'விலைக்கிரயம் செலுத்தி விடுவிப்பது' அல்லது மீட்புக்குரிய கிரயத்தைப் பெற்றுக்கொண்டதற்கான இரசீதின் பேரில் விடுதலை அளிப்பது.

2. உதாரணங்கள் :

அ. கிறிஸ்து நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொள்ளும்படி நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்தார். நாம் நம்முடைய பாவம் செய்யும் சித்தத்திலிருந்து விடுதலைப்பெற்றிருக்கிறோம் என்பதை இவ்வேத வாக்கியத்திலிருந்து அறிந்துகொள்ளுகிறோம் (தீத்து 2:14).

ஆ. உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அனுசரித்து வந்த வீணான நடத்தையினின்று மீட்கப் பட்டீர்கள். மத சம்பந்தமான பாரம்பரிய அடிமைதனத்திலிருந்து விடுதலைப் பெற்று வெளியே கொண்டு வரப்பட்டிருக்கிறோம் என்பதை இவ்வேத வாக்கியத்திலிருந்து நாம் அறிந்துகொள்கிறோம் (1 பேதுரு 1:18).

3. 'லுட்ரோ' என்ற கிரேக்கு வார்த்தைக்கு தொடர்புடைய மற்றொரு கிரேக்கு வார்த்தை 'லுட்ரோன்' – இதன் பொருள் 'மீட்புப்பணத்தைப் பெற்று விடுவி' என்பதாகும். இது ஒரு அடிமையை மீட்பதற்குரிய விலைக் கிரயத்தை குறிக்கிறது.

**உதாரணங்கள் :**

எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே (1 தீமோத்தேயு 2:6). கிறிஸ்து அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவந்தார் – மத்தேயு 20:28 (மாற்கு 10:45–ஐ வாசிக்கவும்).

4. பாவத்திற்கு விற்கப்பட்டுப்போன நம்மை மீண்டும் வாங்கும்படியாகவும், பாவச் சந்தையிலிருந்து வெளியே கொண்டு வந்து விடுதலையாக்கும்படியாகவும் கிறிஸ்து தம்மையே மீட்கும்பொருளாக ஒப்புக்கொடுத்தார்.

அ. நியாயப்பிரமாணத்தின் அடிமைத்தனத்திலிருந்தும், சாபத்திலிருந்தும் விடுதலை (கலாத்தியர் 3:13).

ஆ. பாவத்தின் ஆளுகையிலிருந்தும் அதன் வல்லமையிலிருந்தும் விடுதலை (ரோமர் 8:2).

இ. சாத்தானின் வல்லமையிலிருந்தும் அவனுடைய ஆதிக்கத்திலிருந்தும் விடுதலை (எபிரெயர் 2:14).

ஈ. இவ்வுலகத்தின் ஒழுக்கக்கேட்டிலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலை (கலாத்தியர் 1:4).

**4. புதிய ஏற்பாட்டில் உள்ள மீட்பின் சுருக்கம் :**

1. மனித இனம் மற்றொரு வல்லமையின் கட்டுப்பாட்டிற்கும், அடிமைத்தனத்திற்கும் உட்பட்டதாயிருக்கிறது (ரோமர் 7:14; யோவான் 8:34).
2. அடிமைச் சந்தையாகிய இவ்வுலத்தில் விற்கப்பட்டுப்போன மனிதனை அவனுடைய அடிமைத்தனத்திலிருந்து மீட்பதற்குரிய விலைக்கிரயத்தைச் செலுத்தி விடுவிக்க இயேசுகிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்தார்.
3. கிறிஸ்து அந்த விலைக்கிரயத்தைச் செலுத்தினார் (1 கொரிந்தியர் 6:20;7:23).
4. கிறிஸ்து அடிமைச்சந்தையிலிருந்த நம்மை விலைக்கிரயம் செலுத்தி வாங்கி வெளியே கொண்டு வந்ததன் நோக்கம் : விசுவாசிகளாகிய நாம் மறுபடியும் விற்பனைக்கு வைக்கப்படக்கூடாது என்பதே. இது இறுதி முடிவு.
5. பாவத்திற்கு விற்கப்பட்டுப்போன நம்மை மீட்பதற்குரிய விலைக்கிரயத்தை இயேசுகிறிஸ்து செலுத்தினது மட்டுமல்லாமல், நியாயப்பிரமாணச் சட்டத்திலிருந்தும், பாவத்திலிருந்தும். சாத்தானிடமிருந்தும், சுயசித்தத் திலிருந்தும், இவ்வுலகத்திலிருந்தும் நமக்கு மகிமையான விடுதலையைக் கொடுத்திருக்கிறார்.

**முடிவுரை:**

இப்பாடத்தை நீங்கள் தியானிக்கும்பொழுது, கிறிஸ்துவின் மூலம் பெற்ற விடுதலையைக் குறித்து சந்தோஷப்படுங்கள். அந்த ஆச்சரியமான சந்தோஷம் உங்கள் இருதயத்தை நிரப்பட்டும், உங்களது அனுதின ஜீவியத்தில் இந்த உண்மையைப் (சத்தியத்தைப்) பயன்படுத்துங்கள். மீட்பானது உங்களது வாழ்க்கையில் அனுபவிக்கக்கூடியதும், பயிற்றுவிக்கக்கூடியதுமாய் இருக்க வேண்டும் என்பதை நினைத்துக்கொள்ளுங்கள். உங்களது வாழ்க்கையின் மூலம் நீங்கள் உண்மையாகவே மீட்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை இந்த உலகம் அறிந்துகொள்ளட்டும்.

**மாணவர் கவனத்திற்கு :**

1. வேகமாக இப்பாடத்தை மாத்திரம் படிப்பதினால் வேத அறிவோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியோ உண்டாகாது.
2. விடைத்தாள்களில் உங்கள் விடைகளை அளிக்குமுன்னதாக பாடத்தையும், கேள்விகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

# மீட்பு

*ஒவ்வொரு மாணவரும் பதில் அளித்து அனுப்ப வேண்டிய முகவரி*

*இயக்குனர், ரோக்மா இலவச அஞ்சல் வழிக் கல்வி, தபால் பெட்டி எண் - 9, மதுரை - 625 010.*

**(பூர்த்தி செய்த பின்பு விடைத்தாளை மட்டும் தனிப்படுத்தி தபாலில் அனுப்பவும்)**

**சரியான விடையை வட்டமிட்டு ○ காட்டவும்**

1. மீட்பை அறிந்துகொள்வதைக் காட்டிலும் அனுபவிப்பது நல்லது காரணம் :

   a. நமது அறிவு எப்பொழுதும் குறைவுள்ளது

   b. மீட்பை அனுபவிப்பதன்மூலம், நியாயப்பிரமாணத்திலிருந்தும், பாவத்திலிருந்தும், சாத்தானிடத்திலிருந்தும் விடுதலை பெறுகிறோம்

   c. நமது மீட்பிற்காக கிறிஸ்து விலைக்கிரயம் செலுத்தினார்

2. 'Goel' என்கிற பழைய ஏற்பாட்டு வார்த்தையின் பொருள் என்ன ?

   a. யெகோவா தேவன்

   b. உறவினராக – மீட்பராக இருப்பவர்

   c. தேவன் நம்மோடு இருக்கிறார்

3. பழைய ஏற்பாட்டில் எந்த வேத பகுதியில் உறவினராக மீட்பவர் என்கிற கருத்தைப் பார்க்கிறோம் ?

   a. லேவியராகமம் 26:3–7   b. லேவியராகமம் 25:25–34   c. லேவியராகமம் 25:1–7

4. 'Goel' அல்லது உறவினராக மீட்பவர் பெற்றிருக்கக்கூடிய தகுதிகள் **நான்கை** குறிப்பிடவும்.

   a. கடன்பட்ட நபருக்கு நெருங்கிய உறவினராக இருக்க வேண்டும்

   b. கடன்பட்ட நபருக்கு அருகில் வசிப்பவராக இருக்க வேண்டும்

   c. கடன்பட்ட நபரின் கடன்களையும், சுதந்தரத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்

   d. கடனைச் செலுத்தக்கூடியவராக இருக்க வேண்டும்

   e. கிறிஸ்தவராக இருக்க வேண்டும்

   f. முழுக்கிரயத்தையும் செலுத்த வேண்டும்

   g. நியாயப்பிரமாணம் முழுவதையும் கடைபிடிக்க வேண்டும்

5. உறவினராக – மீட்பவர் என்பதற்கான உதாரணத்தை வேதாகமத்தில் எந்தப் புத்தகத்தில் பார்க்கிறோம் ?

   a. யோனா   b. ரூத்   c. எஸ்றா

6. கிறிஸ்து உறவினராக – மீட்பவர் என்பதைக் காட்டும் வேத வசனம் **நான்கை** குறிப்பிடுக.

   a. கலாத்தியர் 4:4,5   b. எபேசியர் 1:11,14

   c. யோவான் 3:16   d. மத்தேயு 20:28

   e. மாற்கு 16:19   f. கலாத்தியர் 3:13

7. புதிய ஏற்பாடு மீட்பின் அர்த்தத்தை தெரிவிக்கும் 3 அடிப்படையான கிரேக்கு வார்த்தைகளின் அர்த்தத்தை எழுதுக.

   a. எக்ஸ் அகொரஷோ' : ––––––––––––––––––––––––––––––––––––––––––––

   b. 'அகொரஷோ' : ––––––––––––––––––––––––––––––––––––––––––––

   c. 'லுட்ரோ' : ––––––––––––––––––––––––––––––––––––––––––––

8. உறவினராக மீட்பவர் என்கிற காரியத்தை கிறிஸ்து எவ்விதம் நிறைவேற்றினார் ? (**நான்கு** காரியங்களை வட்டமிடவும்)

 a. கிறிஸ்து நம்மில் ஒருவரானார்

 b. கிறிஸ்து பெத்லகேமில் பிறந்தார்

 c. கிறிஸ்துவின் மீட்பு நமது சுதந்திரத்தோடு தொடர்புடையது

 d. கிறிஸ்து வல்லமையுள்ளவராகவும், நம்மை மீட்பதற்கு விருப்பமுள்ளவராகவும் இருந்தார்

 e. கிறிஸ்து பரிசுத்த ஆவியானவரை நம்மில் தங்குவதற்கு அனுப்பினார்

 f. கிறிஸ்து நமது மீட்பிற்கான முழுக்கிரயத்தையும் செலுத்தினார்

 g. கிறிஸ்து மறுபடியும் மகிமை நிறைந்தவராய் வருவதற்கு விருப்பமுள்ளவராயிருக்கிறார்

9. மனிதன் மீட்கப்பட வேண்டும் காரணம் என்ன ?

 a. அவன் பாவத்துக்கு அடிமையாக இருக்கிறான்

 b. தேவன் அனைவரையும் நேசிக்கிறார்

 c. கிறிஸ்து மட்டுமே இதைச் செய்யமுடியும்

10. ஒரு விசுவாசி :

 a. பாவத்தின் வல்லமையிலிருந்து விடுதலை பெறுகிறார்

 b. அவர் விரும்பும் எந்தக் காரியத்தையும் செய்யலாம்

 c. அவர் மறுபடியும் பாவம் செய்வதில்லை

11. நமது விடுதலைக்குச் செலுத்தப்பட வேண்டிய விலைக்கிரயமே கிறிஸ்துதான் என்பதை விளக்க **இரண்டு** வேத வசனங்களை **மேற்கோள்காட்டி** எழுதுக.

 1. ------------------------------------------------------------------------

 2. ------------------------------------------------------------------------

12. **பொருத்துக :** கொடுக்கப்பட்டிருக்கும் வாக்கியத்திற்கு முன்பு சரியான வசனத்தை எழுதவும்.

| | | |
|---|---|---|
| ------------ | சாத்தானின் வல்லமையும் ஆளுகையும் | a. கலாத்தியர் 3:13 |
| ------------ | இந்த உலகத்தின் முறைகேடும், பாரம்பரிய அடிமைத்தனமும் | b. ரோமர் 8:2 |
| ------------ | நியாயப்பிரமாணத்தின் அடிமைத்தனமும் சாபமும் | c. எபிரெயர் 2:14 |
| ------------ | பாவத்தின் வல்லமையும், கட்டுபாடும் | d. கலாத்தியர் 1:4 |

13. **நிரப்புக :** கீழே உள்ள வார்த்தைகளில் சரியானதை எடுத்து எழுதவும்.

 (இரட்சிப்பு, தத்தெடுப்பு, தெரிந்தெடுப்பு, மீட்பு)

 ------------- நாம் புரிந்து கொள்ளும் வரைக்கும் ------------- நம்மால் புரிந்து கொள்ள முடியாது

---

**அவசியமாக உங்கள் பெயரையும் முழு முகவரியையும் தெளிவாக எழுதவும்**

**பதிவு எண் :** ____________________

**முழு பெயர் :** ____________________________________________

**முகவரி :** ____________________________________________

____________________________________________